இருவாச்சிப் பறவை வடிவமைப்பில் தேர்தல் விழிப்புணர்வு

கோவை ஆட்சியர் அலுவலகத்தில் சட்டப் பேரவை தேர்தலை முன்னிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அமைக்கப்பட்ட இருவாச்சிப் பறவை உருவத்தை திறந்துவைத்த மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர்.

கோவை, பிப். 25: கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருவாச்சிப் பறவையின் வடிவமைப்பின் மூலமாக தேர்தல் விழிப்புணர்வை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் புதன்கிழமை தொடங்கிவைத்தார்.

தமிழகத்தில் விரைவில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தேர்தல் குறித்து தேர்தல் ஆணையம், மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக மாவட்டம்தோறும் தேர்தல் அடையாளச் சின்னங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, கோவை மாவட்டத்துக்கு இருவாச்சிப் பறவை தேர்தல் அடையாளச் சின்னமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாக்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக விரலில் வாக்களித்த மையுடன் இருவாச்சிப் பறவையின் தோற்றம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் 'எனது வாக்கு எனது உரிமை' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இந்த இருவாச்சிப் பறவையின் விழிப்புணர்வு தோற்றம் அமைக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நலிவடைந்த பிரிவினரின் பொருளாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு முன்னுரிமை

மத்திய அமைச்சர் ஜிதன் ராம் மாஞ்சி

கோவை, பிப். 25: நலிவடைந்த பிரிவினரின் பொருளாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (எம்எஸ்எம்இ) துறை அமைச்சர் ஜிதன் ராம் மாஞ்சி தெரிவித்தார்.

கோவை கொடிசியாவில் வியாழக்கிழமை நடைபெறவுள்ள தொழில் துறை மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவந்த அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை பேசியதாவது:

இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் துறையின் பங்களிப்பு 33.31 சதவீதமாக உள்ளது. நாட்டின் உற்பத்தித் துறையில் 36 சதவீத பங்கையும், மொத்த ஏற்றுமதியில் 46 சதவீத பங்கையும் இந்தத் துறை வழங்கி வருகிறது. ஒரு நாட்டின் வலிமை என்பது அதன் ஏற்றுமதி அளவை வைத்தே கணக்கிடப்படும் நிலையில், இந்திய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் இத்துறை முதுகெலும்பாகத் திகழ்கிறது.

தொழில் துறையினர் சந்தித்து வரும் சவால்கள் குறித்து மத்திய அரசு விழிப்புடன் உள்ளது. அலுமினியம் மற்றும் தாமிரம் உள்ளிட்ட மூலப் பொருள்களின் விலை உயர்வு என்பது தற்காலிகமானதுதான். விரைவில் நிலைமை சீராகி பழைய விலை நிலவரம் திரும்பும். ஜாப் ஓர்க் செய்யும் நிறுவனங்களுக்கு ஜிஎஸ்டி விகிதத்தை 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகளுக்கு வழங்கப்படுவதைப்போல சிறு தொழிலாளர்களுக்கும் கடன் அட்டை வழங்குவது குறித்த அறிவிப்பு, அதிகாரிகளுடனான ஆய்வுக் கூட்டத்துக்குப் பிறகு வெளியிடப்படும். மூலப் பொருள் விலையைக் கண்காணிக்க தனிக் குழு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து கோவையில் உள்ள நிலவரம் தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசித்த பிறகு பரிசீலிக்கப்படும்.

கோவையின் தயாரிப்புகள் சர்வதேச சந்தையில் வலுவாக சென்றடைய தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு தொடர்ந்து வழங்கும். கயிறு வாரியம் போன்ற அமைப்புகள் மூலம் நலிவடைந்த பிரிவினரின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், தமிழகம், பிகார், உத்தர பிரதேசம், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் குறுந்தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும் மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது என்றார்.

கோவை ஒருங்கிணைந்த நீதிமன்றத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

கோவை ஒருங்கிணைந்த நீதிமன்றத்துக்கு புதன்கிழமை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து, அங்கு சோதனையில் ஈடுபட்ட வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள்.

கோவை, பிப். 25: கோவையில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றத்துக்கு புதன்கிழமை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

கோவைரேஸ்கோர்ஸ் பகுதியில் உள்ள வழக்குரைஞர் பயிற்சி மைய அலுவலகத்துக்கு புதன்கிழமை காலை மின்னஞ்சல் மூலம் கோவை நீதிமன்ற வளாகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது. இது குறித்து ரேஸ்கோர்ஸ் போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, மோப்ப நாய் மற்றும் வெடிகுண்டு கண்டுபிடிப்பு (மெட்டல் டிடெக்டர்) கருவிகளுடன் வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் நீதிமன்றத்தில் உள்ள ஒவ்வொரு அறையிலும் சோதனை நடத்தினர். தொடர்ந்து, வளாகத்தின் பல்வேறு பகுதிகளிலும், வாகனங்கள் நிறுத்துமிடங்கள் என அனைத்துப் பகுதிகளிலும் தீவிர சோதனை நடத்தப்பட்டது. சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக சோதனை நடத்தப்பட்டும், சந்தேகத்துக்குரிய பொருள்கள் ஏதும் கண்டறியப்படவில்லை. இதனால், இந்த மிரட்டல் வெறும் வதந்தி என்பது உறுதி செய்யப்பட்டது. இதுகுறித்து ரேஸ்கோர்ஸ் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மனித-யானை மோதல்: கோவையில் கருத்தரங்கம்

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் மனித–யானை மோதல் குறித்த தேசிய கருத்தரங்கில் 'அறிவியல், சமூகம் மற்றும் தீர்வு' என்ற புத்தகத்தை வெளியிட்ட தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்தின் இயக்குநர் டி.வெங்கடேஷ்.

கோவை, பிப். 25: பாரதியார் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறை மற்றும் இயற்கை மன்றம் சார்பில் மனித–யானை மோதல் மற்றும் தீர்வுகள் என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம் கோவையில் புதன்கிழமை நடைபெற்றது.

கோவை மண்டல தலைமை வனப் பாதுகாவலரும், ஆனைமலை புலிகள் காப்பக கள இயக்குநருமான வெங்கடேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கருத்தரங்கின் ஆய்வு நூலை வெளியிட்டார். மாநில ஈரநில வாரிய அதிகாரி அக்கலே சித்தன்யா மாதவிடு, மாவட்ட வன அலுவலர் என்.ஜெயராஜ் ஆகியோர் பேசினர்.

ரயில்வே தண்டவாளங்களில் யானைகள் விபத்துக்குள்ளாவதைத் தடுத்தல், ட்ரோன் தொழில்நுட்பம் மூலம் யானைகளின் நடமாட்டத்தை கண்காணித்தல் மற்றும் வன விலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு தீர்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், யானைகளின் வழித்தட பாதுகாப்பு, காப்புக்காடுகளில் நெகிழிக் கழிவுகளால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மனித–யானை மோதலைத் தடுப்பது குறித்து ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

கருத்தரங்கில் குன்னூர் அரசு கலைக் கல்லூரி முதல்வர் ஆர். சனில், கால்நடை பராமரிப்புத் துறை கூடுதல் இயக்குநர் எஸ்.மனோகரன், பேராசிரியர்கள் வி.ராமசுப்பிரமணியன், சி.குணசேகரன், விஞ்ஞானி எம்.நவீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர்.

முன்னதாக, விலங்கியல் துறைத் தலைவர் பி.சரவணபவன் வரவேற்றார்.

ஆன்லைன் லாட்டரி விற்பனை: இருவர் கைது

கோவை, பிப். 25: கோவையில் சட்டவிரோதமாக இணையதள (ஆன்லைன்) லாட்டரி விற்பனையில் ஈடுபட்ட இருவரை போலீஸார் கைது செய்து அவர்களிடமிருந்து ரூ.2.46 லட்சத்தை பறிமுதல் செய்தனர்.

கோவை, போத்தனூர் கருப்பராயன் கோயில் பகுதியில் இணையதள லாட்டரி விற்பனை நடைபெறுவதாக போத்தனூர் போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற காவல் ஆய்வாளர் அசோக்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் மாடசாமி ஆகியோர் சலாபி நகர் பகுதியில் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, அந்தப் பகுதியைச் சேர்ந்த சகுபர் சாதிக் (44), கரும்புக்கடை பகுதியைச் சேர்ந்த லத்தீப் (46) ஆகியோரிடம் விசாரணை நடத்தினர். அவர்கள் இருவரும் இணையதள லாட்டரி விற்பனையில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து, சகுபர் சாதிக், லத்தீப் ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்து, அவர்களிடமிருந்து 4 கைப்பேசிகள், ரூ. 2,46,700 ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

கதிர் கல்லூரியில் காலநிலை குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு, கண்காட்சி

கோவை கதிர் கல்லூரியில் நடைபெற்ற காலநிலை விழிப்புணர்வு கருத்தரங்கு, கண்காட்சியில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள், ஒருங்கிணைப்பாளர்களுடன் கல்லூரி நிர்வாகிகள்.

கோவை, பிப். 25: கோவை கதிர் கல்லூரியில் காலநிலை விழிப்புணர்வு, காலநிலை மாற்றத்துக்கான நடைமுறைத் தீர்வுகள் குறித்த கருத்தரங்கு, கண்காட்சி ஆகியவை நடைபெற்றன.

ஜெயின் பன்னாட்டு வர்த்தகர்கள் பவுண்டேஷனுடன் இணைந்து நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் வருமான வரித் துறை தலைமை ஆணையர் அருண் சி.பாரத் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலையான வாழ்க்கை முறை, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது குறித்து உரையாற்றினார்.

நிகழ்ச்சியில், கதிர் கல்வி நிறுவனங்களின் தலைவர் இ.எஸ்.கதிர், செயலர் லாவண்யா கதிர், ஜெயின் பன்னாட்டு வர்த்தகர்கள் பவுண்டேஷனின் கோவை பிரிவுத் தலைவர் ராஜேஷ் போரா, செயலர் அபிஷேக் மேத்தா, ஒருங்கிணைப்பாளர்கள் நிர்மல் ஜெயின், மணீஷ் உள்ளிட்டோர் பங்கேற்றுப் பேசினர்.

இதைத் தொடர்ந்து நகரங்களின் தண்ணீர் பற்றாக்குறை, நீர் மேலாண்மை மூலம் தன்னிறைவு பெறுவது குறித்து கருத்தரங்கு நடைபெற்றது. இதில், சிறுதுளி அமைப்பைச் சேர்ந்த சுஜானி பாலு, சங்கீதா சுபாஷ், சுரேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதையொட்டி நடைபெற்ற விழிப்புணர்வு கண்காட்சியில் விழிப்புணர்வு பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சியில், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ–மாணவிகள் பலர் பங்கேற்றனர்.

பொள்ளாச்சி அருகே சூறைக்காற்றுடன் பெய்த மழையால் 2,000 வாழைகள் சேதம்

மழையால் சேதமடைந்த வாழை மரங்கள்.

பொள்ளாச்சி, பிப். 25: பொள்ளாச்சி அருகே சூறைக்காற்றுடன் பெய்த மழையால் சி.கருமாண்டக்கவுண்டனூர் பகுதியில் 2,000–க்கும் அதிகமான வாழை மரங்கள் சேதமடைந்தன.

பொள்ளாச்சியை அடுத்த சி.கருமாண்டக்கவுண்டனூர் பகுதியைச் சேர்ந்தவர் சபரி. இவர் தனது தோட்டத்தில் இரண்டரை ஏக்கரில் வாழை சாகுபடி செய்திருந்தார். இன்னும் சில நாள்களில் வாழைகள் அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில், செவ்வாய்க்கிழமை இரவு சூறைக்காற்றுடன் பெய்த மழையால் 2,000க்கும் அதிகமான வாழைகள் முறிந்து சேதமாகின. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எடெல்வெய்ஸ் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கோ. லிட். Edelweiss Asset Reconstruction
CIN - U67100MH2007PLC174759
பதிவு அலுவலகம் : எடெல்வெய்ஸ் ஹவுஸ், C.S.T சாலைக்கு அப்பால், கலினா, மும்பை - 400098. +91 22 4183 0600

இணைப்பு - IV-A [பார்க்க - விதி 8(6)]

அசையாச் சொத்து விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் கீழ் அசையாச் சொத்துக்கான E-ஏலப் பொது விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், **திரு.மணிகண்டராஜு** (அடமானதாரர் மற்றும் தனிப்பட்ட ஜாமின்தாரர்) அவர்களிடமிருந்து எடெல்வெய்ஸ் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கம்பெனி லிமிடெட் (EARC டிரஸ்ட் SC 125-இன் டிரஸ்ட்டி எனும் முறையில்) ("EARC") நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் **31.12.2025 நாள்படியானதுமான ரூ.2,96,21,82,116/- (ரூபாய் இருநூற்றுத் தொண்ணூற்று ஆறு கோடியே இருபத்தொரு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து நூற்றுப் பதினாறு மட்டும்)** தொகையை அதன் மேல் வட்டி, செலவினங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் சேர்த்தும் நாளது வரையில் வரப்பெற்ற தொகையைக் கழித்தும் திரும்பப் பெறும் பொருட்டு, EARC நிறுவனத்தின் பெயருக்கு அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஸ்டேட் பாங்கு ஆஃப் இந்தியா **("அசல் கடன் நிறுவனம்")** வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டு, பின்னர் 30.03.2015 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தால் EARC வசம் ஒப்படைக்கப்பட்டதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **("கடனீட்டுச் சொத்து") M/s.C1 இந்தியா பிரைவேட் லிமிடெட்** எனும் e-ஏல முகமையால் அந்நிறுவனத்துடைய https://bankeauctions.com எனும் இணையத்தளத்தின் / இணைய முகப்பின் வாயிலாக **17.03.2026 அன்று நண்பகல் 12:00 மணிக்கும் பிற்பகல் 01:00 மணிக்கும் இடையில்** e-ஏல முறையில் விற்பனை செய்யப்பட உள்ளது. இந்த விற்பனையானது e-ஏலம் முடிவடையும் நேரத்துக்கு முன் ஏலம் கோரப்பட்டால் அவ்வாறு கோரப்படும் ஒவ்வொரு முறையும் **தலா 5 நிமிடங்கள் எண்ணிக்கை வரம்பின்றிக் காலநீட்டிப்படையும்** வகையிலும் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் அடிப்படையிலும் நடைபெறும்.

கடனீட்டுச் சொத்தின் குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித்தொகை (EMD) விவரங்கள் பின்வருமாறு:

கடனீட்டுச் சொத்தின் விரிவான விவரம்	குறைந்தபட்ச விலை	டேவணித்தொகை (EMD)
இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம், பரப்பளவு 28.07 சென்ட். இத்துடன் வணிகக் கட்டடம் (RCC கூரையிட்டது) (கணணன் டிபார்ட்மெண்ட்ல் ஸ்டோர்ஸ் கையகத்தின் கீழ் இருப்பது), பரப்பளவு 43,067 சதுர அடி. அமைவிடம் - கதவு எண்கள் 69, 70, 70/1, வண்ணாந்துறைச் சாலை, TS எண்கள் 176, 191, TS வார்டு எண் 6, பொள்ளாச்சி பேரூராட்சி, பொள்ளாச்சி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம். இது திரு.மணிகண்டராஜு அவர்களின் பெயரில் இருப்பது.	ரூ. 7,40,00,000/-	ரூ. 74,00,000/-

E-ஏலக் காலக்கோடு :	
ஆவண ஆய்வு	02.03.2026 முதல் 09.03.2026 வரையிலான வேலை நாட்களில் முற்பகல் 11 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில்.
ஏல ஆவணம் வாங்குதல்	02.03.2026 முதல் 16.03.2026 வரையிலான வேலை நாட்களில் முற்பகல் 11 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில்.
டேவணித்தொகையைத் (EMD) தாக்கல் செய்யக் கடைசி நாள்	16.03.2026 அன்று மாலை 6 மணி.
ஏல ஆவணத்தைத் தாக்கல் செய்யக் கடைசி நாள்	16.03.2026 அன்று மாலை 6 மணி.
E-ஏலம் தொடங்கும் நாள்	17.03.2026 அன்று நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை.
டேவணித்தொகை செலுத்துவதற்கான வங்கி விவரங்கள்	**கணக்கின் பெயர்** : EARC டிரஸ்ட் SC-125 **வங்கியின் பெயர்** : IDBI வங்கி லிமிடெட் **கணக்கு எண்** : 0004103000066662 **IFSC எண்** : IBKL0000004 **வங்கிக் கிளை** : நாரிமன் பாயிண்ட்
அதிகாரப்பூர்வ அலுவலரின் விவரங்கள்:- பெயர்: வருண் V.ஷா	
மின்னஞ்சல் முகவரி: varunv.shah@edelweissarc.in, கைப்பேசி: +91 74000 57249	

E-ஏல விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய EARC-இன் இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள் : www.edelweissarc.in/Propertysale

நாள் : 26.02.2026
இடம் : மும்பை

அதிகாரப்பூர்வ அலுவலர்
கைப்பேசி: +91 74000 57249

பாங்க் ஆஃப் இந்தியா Bank of India BOI

கடன் வசூல் பிரிவு, கோயமுத்தூர் மண்டல அலுவலகம்
'ஸ்டார்' ஹவுஸ் எண்.324, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-641001.
போன்: 0422-2397221, 2383074,
இமெயில்: ARD.Coimbatore@bankofindia.bank.in

வாகன விற்பனைக்கான மின்-ஏல அறிவிப்பு

கடன் பெற்றவரால் பிணையம் வைக்கப்பட்ட கீழே விவரம் தெரிவிக்கப்பட்டுள்ள அசையும் சொத்து/வாகனத்தை கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்கு(கள்) தெரிவிக்கும் பாக்கித் தொகையை வசூலிக்கும் நோக்கத்தோடு **'எங்குள்ளதோ அங்கிருந்தபடியே', 'எப்படியிருக்கிறதோ அப்படியே', 'அதில் உள்ளபடியே'** என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை பொதுமக்களுக்குப் பொதுவாகவும் கடன்தாரர்(கள்) அடமானதாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பு தரப்படுகிறது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) உத்தரவாதமளித்தவர்(கள்) /அசையும் சொத்து(கள்)/பாக்கி/குறைந்தபட்சமாக நிர்ணயிக்கப்பட்ட விலை/இணையவழி ஏல தேதி மற்றும் நேரம், வைப்புத் தொகை மற்றும் படிப்படியாக ஏலத்தை உயர்த்துவதற்கான தொகை ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி	வாகனம் குறித்த விவரம்	மொத்த நிலுவைத் தொகை
1) திரு.சபரிஷ் ராஜன் த/பெ.ராஜன் குட்டன், கதவு எண்.6, ஸ்ரீ சாய் ஸ்ருதி லயம், மேட்டுக்காடு முதல் தெரு, குனியமுத்தூர், கோயம்புத்தூர்-641008.	LMV (கார்) மாதம் / வருடம் : 06/2024 வாகனத்தின் பதிவு எண் : TN99 AC 4749 தயாரிப்பாளர்: NISSAN MOTORS INDIA PVT LTD வாகன மாடல் : NISSAN MAGNITE MT XE 9/2024	24.02.2026 தேதி அன்று ரூ.6,57,420.00 மற்றும் 10.04.2025 தேதியிலிருந்து மாதாந்திர கணக்கீட்டிலான 7.90% வட்டி மற்றும் பொருந்தும் செலவுகள், பிற கட்டணங்களுடன்.

நிர்ணயிக்கப்பட்ட விலை: ரூ.5,15,000/- முன்வைப்புத் தொகை: ரூ.51,500/- ஏல உயர்வு மடங்கு: ரூ.10,000/-

இ-ஏலத் தேதி மற்றும் நேரம்: 25.03.2026 காலை 11மணி முதல் மாலை 5மணி வரை
(ஏலம் தொடங்கும்பட்சத்தில், ஏலம் நிறைவுபெறும் வரைக்குமான 10 நிமிட அளவற்ற நீட்டிப்புக்களுடன்)

வாகன ஆய்வு: 26.02.2026 முதல் 18.03.2026 வரை காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மேலும் விவரங்களுக்கு கிளை மேலாளரை தொடர்பு கொள்ளலாம். பாங்க் ஆஃப் இந்தியா, 'பேரூர் கிளை, எண்.56, சிறுவாணி மெயின் ரோடு, பேரூர், கோயம்புத்தூர்-641 010. Email: Perur.Coimbatore@bankofindia.bank.in

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை https://baanknet.com பார்க்கவும். விருப்பம் உள்ளவர்கள் கிளை மேலாளர் **திரு.G.வினோத்குமார்** அவர்களை, கைபேசி எண். **99528 62810** தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 25.02.2026

கிளை மேலாளர்
பாங்க் ஆப் இந்தியா, பேரூர் கிளை

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda

பேங்க் ஆப் பரோடா
கிளை : ROSARB (பிரந்நிய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை)
2வது தளம், எண்.82, பேங்க் ரோடு, கோயம்புத்தூர் – 641 018
போன் : 0422 2302423, 2302324. மின்னஞ்சல் : sarcoi@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் சுருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
M/s. டிரான்சோ டெக்னாலஜிஸ் (கடன்தாரர்), பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் : 1. திரு.சுபீஷ். PC, 2. திரு.சோமசுந்தரம். M, மற்றும் 3. திருமதி.சுவர்னா. R.M, க.ச.எண்.3/172/1, காடுவெட்டிபாளையம், கருமத்தம்பட்டி, கோயம்புத்தூர் – 641 659, **திரு.சுபீஷ். PC, (M/s. டிரான்சோ டெக்னாலஜிஸ்–ன் நிர்வாகப் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** C/o. பாலன். K M, பரமார்த்து சாலில், வட்டோலி பஜார், பாலுச்சேரி, கோழிக்கோடு – 673612, **திரு.சோமசுந்தரம். M, (M/s. டிரான்சோ டெக்னாலஜிஸ்–ன் பங்குதாரர் மற்றும் அடமானதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** த/பெமெய்யப்பன், மனை எண்.24, குமுதம் நகர், கிழக்கு மண்டலம், கோயம்புத்தூர் – 641 035. **திருமதி.சுவர்னா. R.M, (M/s. டிரான்சோ டெக்னாலஜிஸ்–ன் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** C/o. ராஜனி. T, T பரயில் ஹவுஸ், லேண்ட் மார்க் லேஃஸ் ஜிம், கொட்டூலி அஞ்சல், கொட்டூலி, கோழிக்கோடு, கேரளா – 673 016.	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் (குற்போதைய கணபதி) சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலூகா, விளாங்குறிச்சி கிராம க.ச.எண்.231ல் மொத்தமுள்ள புஏக்கர் 10.24 நிலத்தில் அடங்கிய 1.48 ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் கீழ்வருமாறு :** வடக்கு : கிழமேல் தடம், கிழக்கு : R. செங்கோட்டையனுக்குச் சொந்தமான சொத்து, தெற்கு : க.ச.எண்.360 நிலம், மேற்கு : K கோவிந்த ராஜ மற்றும் S. கஜாதாவுக்குச் சொந்தமான சொத்து. இதனுட்பட்ட நிலம் வீட்டுமனைகள் பல கொண்ட ஒரு வீட்டு மனைப்பிரிவாக மாற்றப்பட்டு, குமுதம் நகர் எனப் பெயரிடப்பட்டு, நகர் மற்றும் ஊரக திட்டமிடல் துறை தனது LP/R (CPN) எண்.351/87ன் படி அங்கீகரிக்கப்பட்டது. இதிலடங்கிய **மனை எண். 24 ன் எல்லைகள் கீழ்வருமாறு :** மனை எண்.37க்கு வடக்கு, மனை எண்.23க்குக் கிழக்கு, 40 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, மனை எண்.25க்கு மேற்கு. **அளவுகள் :** கிழமேல் இருபுறமும் 40 அடி, தென்வடல் இருபுறமும் 65 அடி. ஆக மேற்குறிப்பிட்ட 2600 க.அடி அல்லது 5 சென்ட் 422 க.அடி மனை நிலத்துடன், அங்கு கட்டப்பட்டுள்ள RCC தார்க குடியிருப்பு வீடும், அதன் பிற அனைத்து இணைப்புகளுடன், லேயவுட் ரோடுகளின் மாமூல் உபயோக உரிமையும் சேர்ந்த சொத்து. உட்பிரிவின் படி பட்டா எண்.443ன் கீழ் க.ச.எண்.231/1A1A யில் அமைந்துள்ளது. கட்டிட வரைபடத்திட்டம் மற்றும் அனுமதி சர்கார் சாமக்குளம் ஒன்றிய ஆணையாளர் கடித எண்.மூ.மு.2572/95–A5 நாள் 07.07.1995ன் படியும் கூடுதல் திட்டம் 565/2011–12ன் படி விளாங்குறிச்சி ஊராட்சியிலும் அங்கீகரிக்கப்பட்டதாகும். அட்டவணைச் சொத்து விற்பனை ஆவண எண்.4361/1988ன் படி கொடுக்கப்பட்டுள்ளது. **அட்சரேகை : 11.049972, தீர்க்கரேகை : 77.014972.** மேற்படி சொத்து திரு. மெ